84

அணைக்கட்டு வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)/
தனிஅலுவலர் இறைவன்காடு ஊராட்சி அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.சு.குணசேகரன், பி.காம்.,

ந.க.அ8/1188/2018 நாள்: 22.06.2018

பொருள்:- அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் 2017 - அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம் - இறைவன்காடு ஊராட்சி/கிராம சர்வேஎண்: 428/8ஏ1-ல் 3.09 ஏக்கர் (12504.00 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்துதல் எண்.759(R)/2018-ன்படி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது- விற்பனை செய்யபடாமல் உள்ள 66 மனைகளை அங்கீகரித்து உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை:-
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) வேலூர் மண்டலம், எண்.239, பேஸ்-2, சத்துவாச்சாரி, வேலூர்- 9 அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.1456/2018/வேம3. நாள்:25.05.2018.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அணைக்கட்டு அவர்களின் நேரடி ஆய்வு நாள்: .06.2018
3. தனி அலுவலர் - இறைவன்காடு ஊராட்சி/ வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), அணைக்கட்டு அவர்களின் செயல்முறைகள் ந.க.அ8/1188/2018 நாள்: 07.06.2018
4. தனிஅலுவலர் - இறைவன்காடு ஊராட்சியின் தீர்மானம் எண்:35, நாள்:20.06.2018
5. பல்வகை ரசீது எண்:034208, நாள் 18.06.2018

❀❀❀❀❀❀❀

உத்தரவு:

பார்வையில் காணும் வேலூர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்களின் 25.05.2018 செயல்முறைகள் கடித உத்தரவின்படி அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம் இறைவன்காடு ஊராட்சி/ கிராம சர்வேஎண்: 428/8எ1-ல் 3.09 ஏக்கர் (12504.00 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துதல் எண்.759(R)/2018-ன்படி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள விற்கப்படாத 66 மனைகளுக்கான வரைமுறைப்படுத்துதல் கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ.30 வீதம் மொத்தம் 8636.41சதுர மீட்டருக்கு ரூ.259092/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து தொன்னூற்று இரண்டு மட்டும்) அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் விற்பனை செய்யப்படாத 66 மனைகளின் வளர்ச்சிகட்டணம் 1 சதுரமீட்டருக்கு ரூ.25 வீதம் மொத்தம் 8636.41சதுரமீட்டருக்கு ரூ.215910/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினைந்தாயிரத்து தொள்ளாயிரத்து பத்து மட்டும்) இறைவன்காடு ஊராட்சி கணக்கில் பார்வை 3-ல் காணும் கடிதத்தின்படி உரிய கணக்குகளில் செலுத்தி அதற்குண்டான ரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

48

விற்கப்படாத மனைகளின் பரப்பளவிற்கு ஈடான 10% பூங்காக்கள் பரப்பு விவரம்:-

| பூங்காக்கள்-02 | மொத்தப்பரப்பு சதுரஅடி/சதுரமீட்டர் |
|---|---|
| மனை எண்கள்:-36, 37 | 9709.00 சதுரஅடி / 902.00 சதுரமீட்டர் |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரங்கள்:-**

பார்வையில் காணும் கடிதத்தின் இணைப்பில் தெரிவித்துள்ளவாறு கட்டணங்கள் கீழ்கண்டவாறு செலுத்த தெரிவிக்கப்படுகிறது.

**1. வரன்முறைப்படுத்துதல் கட்டணம்**

❖ **விற்கப்பட்ட மனைகளுக்கு**

மேற்குறிப்பிட்டுள்ள மனை எண்கள் அமைந்துள்ள ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட 8 மனைகளின் வரைமுறைப்படுத்துதல் கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ.30 வீதம் மனை உரிமையாளர்களிடம் தனித்தனியாக மொத்தம் 930.05 சதுர மீட்டருக்கு ரூ.27902/- (ரூபாய் இருபத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து இரண்டு மட்டும்) பெறப்பட்டு கீழ்கண்ட அரசு தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்படுகிறது.

❖ **விற்கப்படாத மனைகளுக்கு**

மேற்குறிப்பிட்டுள்ள மனை எண்கள் அமைந்துள்ள விற்பனைசெய்யப்படாத 66 மனைகளின் வரைமுறைப்படுத்துதல் கட்டணம் 1 சதுரமீட்டருக்கு ரூ.30 வீதம் மொத்தம் 8636.41சதுர மீட்டருக்கு ரூ.259092/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து தொன்னூற்று இரண்டு மட்டும்) பெறப்பட்டு கீழ்கண்ட அரசு தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்படுகிறது.

0217 - Urban Development
60 - Other Urban Development Schemes
800 – Other Receipts
AT '– Receipt Under Regularization of Unapproved Layout & Plots
DTCP (DP Code – 0217 -60-800-AT0007)

**2. வளர்ச்சி கட்டணம்**

❖ **விற்கப்பட்ட மனைகளுக்கு**

மேற்குறிப்பிட்டுள்ள மனை எண்கள் அமைந்துள்ள எஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட 8 மனைகளின் வளர்ச்சிகட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ.25 வீதம் மனை உரிமையாளர்களிடம் தனித்தனியாக மொத்தம் 930.05சதுர மீட்டருக்கு ரூ.23252/- (ரூபாய் இருபத்து மூன்றாயிரத்து இருநூற்று ஐம்பத்திரண்டு மட்டும்) பெறப்பட்டு இறைவன்காடு ஊராட்சி கணக்கில் செலுத்த தெரிவிக்கப்படுகிறது.

❖ **விற்கப்படாத மனைகளுக்கு**

மேற்குறிப்பிட்டுள்ள மனை எண்கள் அமைந்துள்ள விற்பனை செய்யப்படாத 66 மனைகளின் வளர்ச்சிகட்டணம் 1 சதுரமீட்டருக்கு ரூ.25 வீதம் மொத்தம் 8636.41 சதுரமீட்டருக்கு ரூ.215910/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினைந்தாயிரத்து தொள்ளாயிரத்து பத்து மட்டும்) இறைவன்காடு ஊராட்சி கணக்கில் செலுத்த தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விற்பனை செய்யப்படாத உள்ள ஏற்கனவே பொதுநலன் உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மனை எண்கள். 36 மற்றும் 37-ன் 902.00 சதுரமீட்டர் பரப்பளவு உள்ள பூங்காக்களையும் மற்றும் இம்மனை தொகுப்பிற்குட்பட்ட சாலைகளை உள்ளாட்சி அமைப்பிற்கு தானப்பத்திரம் எழுதி ஆணையாளர், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம் என்ற பெயருக்கு பத்திரப்பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களை இவ்வலுவலகத்தில் அளிக்கும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆனையை பெற்றுக்கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (OSR - Open Space Reservation - இடம் பெயரளவு தானப்பத்திரமாக இருக்ககூடாது).

பார்வை 4-ல் குறிப்பிட்டுள்ள இறைவன்காடு ஊராட்சி தீர்மானத்தின்படி இம்மனைகளை வரன்முறைப்படுத்துவதை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை தொடர்ந்தும், இம்மனை தொகுப்புகளுக்குண்டான சாலைகள் மற்றும் பூங்காக்களை உள்ளாட்சி அமைப்பிற்கு தானப்பத்திரம் மூலம் ஆவண எண்கள். 2380/2018, TP No.21821882/2018ன்படி பத்திரப்பதிவு செய்து சமர்ப்பித்ததை தொடர்ந்தும் கீழ்கண்ட எண்ணுள்ள மனைகள் மட்டும் அங்கீகரித்து உத்தரவிடப்படுகிறது.

விற்கப்படாத மனைகள் விவரம்:-

| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை-66 | மொத்தப்பரப்பு சதுரஅடி/சதுரமீட்டர் |
|---|---|
| மனை எண்கள்: 1, 3, 7-20, 24-29, 31-35, 38-76 | 92961.54 சதுரஅடி / 8636.41சதுரமீட்டர் |

தனி அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ);
அணைக்கட்டு.

[illegible]

பெறுநர்:-

திரு.A.கண்ணன்,
எண்.128, பெரியார் குறுக்குத் தெரு,
பாறைமேடு, பலவன்சாத்து,
வேலூர் 632 002.

நகல்:

1. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம்
2. நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர்(பொ), வேலூர் மண்டலம்.நெ.239, பேஸ்- 2, சத்துவாச்சாரி, வேலூர் - 9.

நகல் பணிவு:

1. உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), திருப்பத்தூர்.

## நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)

வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. சி.சுப்பிரமணியம், டி.சி.இ.,

ந.க.எண்.1456/2018/வேம3, நாள்: 25.05.2018

* * * * *

| | |
|---|---|
| பொருள் : | அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் – 2017 – 3.09 ஏக்கர் (12504.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை எண் : 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள்: 04.05.2017.<br>2. அரசாணை எண் : 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள்: 13.10.2017.<br>3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Operational Guideline, Roc. No.13193/2017/LA2,நாள்.30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.<br>4. மனுதாரர் திரு. A.கண்ணன் அவர்களின் விண்ணப்பம் நாள்: 20.03.2018.<br>******** |

**உத்தரவு :**

பார்வை (1 ) மற்றும் (2) –ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (4)–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், இறையங்காடு ஊராட்சி/கிராமம், சர்வே எண்கள்.428/8எ1 –ல் 3.09 ஏக்கர் (12504.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ./ந.ஊ.து.இ(வேமஅ) வரன்முறைபடுத்துதல் **எண்: 759 (R)/2018** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 12504.00 ச. மீ (அ) 134600.40 ச.அடி (அ) 3.09 ஏக்கர் |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : | 76 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 8 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்கள் | : | (2, 4–6, 21–23, 30) |
| விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு | : | 10011.00 ச.அடி |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 68 |

விற்கப்படாத மனைகளின் எண்கள் : (1, 3, 7–20, 24–29, 31–35, 38–76)

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு: 85826 .00 ச.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 9709.00 ச.அடி – 10.16%
(மனை எண்கள்:36, 37)

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம் :**

1. பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| அ. இணையதளம் வாயிலாக மனை ஒன்றிக்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION NO : DTCP/L/0062946/2017, நாள்.15.03.2018 –ன் படி விற்கப்படாத 68 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் .34,000/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

1. வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்

| மனை எண் | பரப்பளவு (ச.மி) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒருசதுரமீட்டருக்கு 30/– (ரூபாய் முப்பது வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒருசதுரமீட்டருக்கு 25/– (ரூபாய் இருபத்தைந்து வீதம்) |
|---|---|---|---|
| விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத மனைகளின் பரப்பு குறித்த விவரம் மற்றும் அதற்குரிய வளர்ச்சிக் கட்டணம், வரன்முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்துவது குறித்த விவரம் தனித்தாளில் தயாரிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (பக்கம் 1 முதல் 3 வரை) | | | |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசுகணக்குத் தலைப்பு**

| | |
|---|---|
| " 0217,Urban Development -60 Other Urban Development Scheme -800 .Other receipts AT Receipts under Regularization charges ofUnapproved Layout and Plots – DTCP(DPC 0217 60800 AT 0007) " | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

**ஆ) வளர்ச்சிக் கட்டணம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.**

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2–ல் கட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

89

**நிபந்தனைகள்**

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நவ4(3) நாள்.13.10.2017–ல் விதி எண்.7 (g) (ii) மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர் (பொ),
வேலூர் மண்டலம்.

25/5/18

**இணைப்பு:**

1. மனைப்பிரிவுவரைபடம் – 2.
2. வளர்ச்சிக் கட்டணம், வரன்முறைப்படுத்துதல் கட்டண விவரபட்டியல்.

**பெறுநர்,**

1. தனிஅலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்,
இறையங்காடு ஊராட்சி/கிராமம்,
அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம்,
அணைக்கட்டு வட்டம்,
வேலூர் மாவட்டம்.

**நகல்:**

| | |
|---|---|
| 2. மனுதாரர்.<br>திரு. A.கண்ணன்,<br>எண்.128, பெரியார் குறுக்கு தெரு,<br>பாறைமேடு, பலவன்சாத்து,<br>வேலூர்–632002. | உள்ளாட்சிக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் விவரங்கள் சமர்ப்பிக்கும் பொருட்டு |
| 3. உதவிஇயக்குநர்,<br>நிலஅளவை (ம) பதிவேடுகள்துறை,<br>வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |

| | |
|---|---|
| 4. வட்டாட்சியர்,<br>அணைக்கட்டு வட்டம்,<br>வேலூர் மாவட்டம் | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 5. சார்பதிவாளர்,<br>பள்ளிகொண்டா சார்பதிவாளர் அலுவலகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 6. நகர் ஊரமைப்பு ஆணையர்,<br>807, அண்ணாசாலை,<br>சென்னை– 2. | (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது) |
| 7. கோப்பு<br><br>8. வைப்பறை | |